<u>**சார்பு நீதிமன்றம், அரூர்**</u>

<u>**நாள் – 15.06.2026**</u>

**OS.224/2019**

**பி.வா.சா.1 திரு.குன்னா என்கிற அன்வர்பாஷா**

**பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் அரூர் பாட்சாபேட்டை, தில்லைநகரில் குடியிருந்து வருகிறேன். எனக்கு அரூர் சந்தைமேட்டில் வீடு உள்ளதா என்றால் இல்லை. அங்கு வீடு இருந்ததா என்றால் இல்லை. நான் வைத்துள்ள கறிக்கடை அரூர் பஸ்டாண்டுக்கு அருகில், பாலத்திற்கு அருகில் தெற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். அந்த கறிக்கடையில் இருந்து நான் குடியிருக்கும் வீடு சுமார் 1 km தூரம் இருக்குமா என்றால் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் குடியிருக்கும் தில்லை நகர் எத்தனையாவது வார்டு என்றால் 5ம் வார்டு. என்னுடைய கறிக்கடை உள்ள இடம் 11ம் வார்டு என்றால் சரிதான். சந்தைமேடு நான் வைத்துள்ள கறிக்கடையில் இருந்து 1 km தூரம் இருக்கும் என்றால் சரிதான்.

2. நான் கறிக்கடை வைத்துள்ள இடமானது பெருமாள் மகன் ரவீந்திரன் என்பவரிடம் இடம் 13.12.2017–ல் கிரையம் வாங்கியது என்று சொன்னால் சரிதான். நான் கிரையம் வாங்கிய மேற்படி 13.12.2017–ம் தேதியிட்ட அசல் கிரைய பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ரவீந்திரன் என்னிடம் கிரையம் கொடுத்த சொத்திற்கான மூல பத்திரம் 1518/1994 கிரைய ஆவண நகல், 927/2002, 667/2013, 4031/2017 ஆகிய

ஆவணத்தின் அசல்கள் என்னிடம் ரவீந்திரன் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். மேற்படி மூலபத்திரத்தின் அசல் மற்றும் நான் கிரையம் பெற்ற அசல் ஆவணம் ஆகியவற்றை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. நான் கசாப்கடை வைத்துள்ளது 2 அடுக்கு தார்சுபோட்ட கட்டிடம் என்றால் சரிதான். அந்த கசாப்கடைக்கு கீழ் இருக்கும் வாசலுக்கு ஒரு கதவு எண்ணும், மேல் இருக்கும் வாசலுக்கு ஒரு கதவு எண்ணும் உள்ளது என்றால் சரிதான். அதன் கதவு எண்.11/416, 11/417 என்று சொன்னால் சரிதான். நான் கிரையம் வாங்கிய 13.12.2017 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் பழைய வார்டு எண்.8, புதிய வார்டு எண்.11 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கசாப்கடையின் தெற்கு பக்க சுவர் எவ்வளவு அளவு என்றால் அது எனக்கு தெரியவில்லை. நான் கிரையம் பெற்ற அந்த கசாப்கடையின் கீழ் உள்ள தளத்தை நான் பயன்படுத்துகிறேன், மேல் உள்ள தளத்தை நான் வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் இல்லை, 2ம் நான் தான் பயன்படுத்துகிறேன். அந்த கட்டிடத்தின் தரைத்தளம், மற்றும் முதல் மாடிக்கு தனித்தனியாக மின்இணைப்பு உள்ளது என்றால் சரிதான். அந்த மின்இணைப்பு எண்கள் 682, 574 என்று சொன்னால் சரிதான்.

4. மேற்படி நான் ரவீந்திரனிடம் கிரையம் பெற்ற கிழமேல் இருபுறமும் 22அடி நீளம் என்று சொன்னால் அளவு தெரியவில்லை. தென்வடல் இருபுறமும் 5 அடி அகலம் என்று பத்திரத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் கிரையம் வாங்கிய இடம் 110 சதுர அடி (10.22 சதுர மீட்டர்)

என்று சொன்னால் நான் கட்டிமாக இருந்ததை அப்படியே வாங்கினேன், அளவு பற்றி எனக்கு தெரியவில்லை. நான் வாங்கிய சொத்திற்கு 4 புற எல்லைகள் அரூர் – திருப்பத்தூர் ஐவேஸ் ரோட்டிற்கும் ரோடு மார்ஜினுக்கும் கிழக்கு, ஓடைக்கு தெற்கு, சம்பத் காலிமனைக்கு மேற்கும், வடக்கும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் கிரையம் பெற்ற சொத்திற்கு தெற்கு பக்கம் யாருடைய நிலம் என்றால் அது எனக்கு தெரியவில்லை. நான் செக்குபந்தி பத்திரத்தில் போட்டு வாங்கவில்லையா என்றால் சரியாக எனக்கு தெரியவில்லை, கட்டித்தை நான் வாங்கினேன். நான் ரவீந்திரனிடம் கிரையம் வாங்கிய இடம் 110 சதுர அடி (10.22 சதுர மீட்டர்) தவிர எனக்கு அந்த இடத்தில் அதிகமான சொத்துக்கள் பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல, அந்த இடத்தில் பில்டிங் இருந்ததை அப்படியே வாங்கினேன், அந்த இடத்தில் எவ்வளவு நிலம் என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 ரவீந்திரனிடம் நான் கிரையம் பெற்ற ஆவணத்தில் சொத்து விவரத்தில் எவ்வளவு இடம் நான் கிரயம் வாங்கியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது, நான் பில்டிங் இருந்ததை அப்படியே வாங்கினேன். நான் கிரையம் வாங்கிய இடம் 110 சதுர அடிதான், அதற்கான மூலபத்திரத்தில் இருப்பதும் 110 சதுர அடிதான் என்று சொன்னால் அளவு பற்றி எனக்கு தெரியாது, நான் ஏற்கனவே இருந்த பில்டிங்கை அப்படியே விலைக்கு வாங்கினேன். இந்த வழக்கின் வாதி சிகாமணி 110 சதுரஅடிக்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது எனக்கு தெரியாது.

5. இந்த வழக்கு சிகாமணி தாக்கல் செய்துள்ள தாவா சொத்தானது என்னுடைய நிலமான 110 சதுரஅடிக்கு கிழக்கு பக்கம் உள்ள இடம்தான் தாவா சொத்து என்று சொன்னால் சரியல்ல, அந்த இடத்தில் இடம் எதுவும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொத்து விவரத்தில் மேற்கு பக்கம் முன்னாபாய் கடை என்று சொல்லப்பட்டுள்ளது அதற்கு நான் பதிலுரை தாக்கல் செய்தபோது மறுப்பு தெரிவித்துள்ளேனா என்றால் நான் தெரிவித்துள்ளேன். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள எனது தரப்பு ஆவணங்கள் வழக்கு சொத்துக்கு சம்பந்தப்படாதது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் நான் நடத்தும் 2 அடுக்கு கசாப் கடைக்கு உண்டான ஆவணம், நான் பாட்சா பேட்டை தில்லை நகரில் குடியிருந்து வரும் சொத்துக்கான ஆவணம், அரூர் சந்தைமேட்டில் உள்ள என்னுடைய சொத்துக்கான ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

6. அரூரில் புது சந்தைமேடு என்பது சந்தைமேடு என்பதை தான் சொல்லப்படுகிறதா என்றால் அது எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணம் புது சந்தைமேட்டில் வார்டு எண்.1ல் வைத்துள்ள கடைக்கான தொழில் வரி ரசீது என்று சொன்னால் சரியல்ல, புது சந்தைமேட்டில் எனக்கு எந்த கடையும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்துக்கான சொத்து வரி இரசீது பி.வா.சா.ஆ.4 ஜெபின்தாஸ் என்பவர் பெயரில் வார்டுஎண்.6 மேல்பாட்சா பேட்டையில் உள்ள சொத்துக்கான சொத்து வரி இரசீது என்று சொன்னால் இல்லை. தாவா சொத்து சம்பந்தப்பட்ட வீட்டு வரி இரசீது 6, 8 ஆகியவை தாவா சொத்துக்கு

சம்பந்தப்பட்டது கிடையாது, எனது கறிக்டைக்கும் சம்பந்தப்பட்டது கிடையாது, அது பி.வா.சா.ஆ.6 ஆனது வார்டு எண்.6 மேல்பாட்சாபேட்டைக்கு சம்பந்தப்பட்ட சொத்துக்கான சொத்து வரி இரசீது, பி.வா.ஆ.8 ஆவணம் வார்டு எண்.11 கதவு எண்.651,ST–1(மேல்பாட்சாபேட்டை) சொத்திற்கான சொத்து வரி இரசீது அது இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சொத்திற்கான வரி இரசீதுகள் மேல்பாட்சாபேட்டையில் உள்ள எனது சொத்திற்கானது என்று சொன்னால் நான் அதனை கொடுக்கவில்லை. பி.வா.சா.ஆ.2, 3, 5, 9 ஆகிய ஆவணங்கள் நான் கசாப் கடை நடத்தும் கதவு எண்.416 கடைக்கான சொத்து வரி இரசீதுகள் என்று சொன்னால் சரிதான்.

7. நான் கசாப் கடை நடத்தும் கடை எண்.417 க்கான சொத்து வரி இரசீதுதான் பி.வா.சா.ஆ.8 நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் ரவீந்திரனிடம் வா.சா.ஆ.8 கிரைய ஆவணத்தின் மூலம் வாங்கிய சொத்திற்கு பட்டா, சிட்டா வருவாய் ஆவணங்கள் தனியாக வாங்கிவிட்டேனா என்றால் வாங்கிவிட்டேன். அந்த பட்டா, சிட்டா ஆவணத்தை நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. சிவராமன் என்பவர் யார் என்றால் எனக்கு தெரியவில்லை. பி.வா.ஆ.10 மின்இணைப்பு அட்டைகள் கசாப்கடை கட்டிடத்தில் உள்ள மின்இணைப்புக்கானது என்று சொன்னால் சரிதான். மேற்படி நான் கிரையம் பெற்ற இடத்தில் உள்ள மின்இணைப்புக்களை என் பெயருக்கு மாற்றி விட்டேனா என்றால் மாற்றிவிட்டேன். மேற்படி மின்இணைப்பு என் பெயருக்கு மாறி உள்ளது என்பதற்கான ஆவணத்தை

நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, கொடுத்துள்ளேன். என்பெயரில் மின்இணைப்பு கட்டிவருகிறேன் என்பதற்கான ஆவணத்தினை நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். பி.வா.சா.ஆ.10 மின்இணைப்பு அட்டை சிவராமன் பெயரில் உள்ளது, அந்த சிவராமன் எனக்கு யார் என்று தெரியாது என்று சொன்னால் சரிதான்.

8. தாவா சொத்து சிகாமணிக்கு பாத்தியப்பட்டது, உரிமை உடையது, சிகாமணி சுவாதீனத்தில் இருந்தது என்று சொன்னால் கிடையாது. தாவா சொத்து என்பதில் எனக்கு எவ்விதமான உரிமையோ, பாத்தியமோ கிடையாது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை அக்கிரமாக கைப்பற்றி அக்கிரம சுவாதீனத்தில் இருந்துவருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. சிகாமணி கால் ஊனம் உற்றவர் என்று சொன்னால் சரியல்ல, அவர் நன்றாக நடப்பவர். எனக்கு ஆள்பலம், பணபலம், செல்வாக்கு இருப்பதால் சிகாமணி சொத்தில் நான் ஆக்கிரமித்து அக்கிரம சுவாதீனத்தில் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி சிகாமணி தாக்கல் செய்துள்ள வழக்கின்படி தீர்ப்பாக வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.15 16:17:14 +0530